# பாக ஆவணம்

201______ம் வருடம் ______ மாதம் _____ம் நாள் ______________________ விலாசத்தில் வசிக்கும் திரு.________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. ________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) 1வது நபர்

______________________ விலாசத்தில் வசிக்கும் திரு.________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. ________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) 2வது நபர்

ஆக நாம் இருவரும் சேர்ந்து சம்மதித்து எழுதிக்கொள்ளும் பாகப்பிரிவினை பத்திரம் என்னவென்றால்.

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'ஏ' ஷெடியூல் சொத்தானது __________. ______________ பதிவு மாவட்டம், __________ சார்பதிவகம், ______________ கிராமம், சர்வே எண்.______ மனை எண்._____, கதவு எண்.__________________ இதற்கு உட்பட்ட விஸ்தீரணம் _________ சதுரடிக்கொண்ட சொத்தினை, நமது தகப்பனார் திரு.______________ அவர்கள் கடந்த __________ந் தேதியில் ______________ சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம், ______ வருடத்திய _________ம் ஆவண எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரப்படிக்கு, தமது பெயருக்கு கிரையம் கிடைக்கப் பெற்று அன்று முதல் அவர்கள் மேற்படி சொத்தினை அவருடைய சுவாதீனத்தில் சர்வ அக்கு உரிமைகளுடன் சர்வ வில்லங்கச் சுத்தியாய் ஆண்டனுபவித்துக்கொண்டு வந்தார்.

அவ்வாறு ஆண்டனுபவித்து வருகையில் நமது தகப்பனார் பிரஸ்தாப சொத்தைப் பொருத்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் _____ தேதியில் காலமாகிவிட்டார். அவர் காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் என ______ வட்டாட்சியர் வழங்கிய வாரிசுரிமை சான்று எண்.______ நாள்._______ன்படி நமது தாயார் திருமதி.__________ மற்றும் நாம் இருவரும் வாரிசுகள் ஆவோம். இந்நிலையில் _____ தேதியில் நமது தாயாரும் இயற்கை எய்திவிட்ட நிலையில்,

Verified RealEstate ™

பிரஸ்தாப சொத்தை நமது தந்தையின் நேரடி வாரிசுகளாக நாம் இருவர் மட்டும் கூட்டாக அனுபவித்து வருகிறோம்.

மேலும் நம்மால் இச்சொத்தை கூட்டாக ஆண்டனுபவிக்க முடியாத காரணத்தினாலும், நமக்குள் சண்டை சச்சரவுகள் நிகழாத வண்ணம் இருக்க வேண்டியும் இன்றைய தேதியில் இந்தப் பாக ஆவணம் எழுதிக் கொள்கிறோம்.

நாம் நமக்கு கிடைத்த அதங்கள் மீது எனக்குண்டான அன்புனாலும், பிரியத்தினாலும் இதனடியில் 'பி' ஷெடியூலில் கண்ட எனக்குண்டான பிரிபடாத 1/2 பாக சொத்தினை, இன்றைய தேதியில் நான் தங்களின் பெயருக்கு இந்த விடுதலை பத்திரப்படிக்கு விடுதலை செய்து தங்களின் சுவாதீனத்தில் ஒப்படைத்து விட்டேன்.

ஆகையால் இன்று முதல் தாங்கள் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'பி' ஷெடியூல் சொத்தினை தங்கள் பெயரில் மனைக்குரிய ரெவின்யு ரிக்கார்டுகளையும், பட்டாவையும் சப்-டிவிஷன் செய்துக்கொண்டும், கட்டிட கட்ட அனுமதி பெற்றக்கொண்டு, மாநகராட்சி கட்டிட வரிவகையறாக்கள், மின்இணைப்பு வரி வகையறாக்கள், குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி வகையறாக்கள் உள்ள பாகத்திற்கு பெயர் மாற்றிப் பெற்றுக்கொண்டு, தங்களின் இஷ்டம்போல் தங்களின் புத்திர பௌத்திர பாரம் பரியமாய், வித்தொத்தி தானாதி வினிமிய விக்கிரையங்களக்கு உரித்த யோக்கியங்களுடன் சர்வ சுதந்திர பாத்தியதைகளுடன் சர்வ வில்லங்க சத்தியாய் ஆண்டனுபவித்துக்கொள்ள வேண்டியது.

அப்படி தாங்கள் இன்று முதல் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'பி' ஷெடியூல் சொத்தினை ஆண்டனுபவித்துக் கொள்வதில் எனக்கும், எனது வாரிசுகளுக்கும், சந்ததிகளுக்கம் மற்ற உள்ள எவருக்கும் எவ்விதமான சொந்தமும், சம்மந்தமும், பாக அக்கு வாரிசு உரிமையும், பின்தொடர்ச்சி தாவாக்களும் ஏதும் கிடையாது என்று இதன் மூலம் நான் உறுதி அளிக்கிறேன்.

Verified RealEstate™

ஆக இந்தப்படிக்கு நான் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமான சம்மதித்து எழுதிக் கொடுத்த விடுதலை ஆவணம் ஆகும்.

மேற்படி ஆண்டனுபவித்துக்கொண்டு வந்த ________ சதுரடிக் கொண்ட சொத்தினை நாங்கள் இருவரும் ஆண்டனுபவித்துக்கொண்டு வருகின்றோம். மேலும் எங்களால் கூட்டாக ஆண்டனுபவிக்க முடியாத காரணத்தினாலும், எங்களுக்கள் சண்டைச்சச்ரவுகள் நிகழாத வண்ணம் இருக்க வேண்டியும் இன்று தேதியில் இந்த பாகப்பிரிவினைப் பத்திரம் எழுதிக் கொள்கின்றோம்.

அதன்படி இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'பி' ஷெடியூல் சொத்தினை நம்மில் 1வது நபரும், 'சி' ஷெடியூல் சொத்தினை நம்மில் 2வது நபரும் பாக சொத்தாக அவரவர்கள் பெற்றுக்கொண்டு மற்றவர்களின் பாகத்தில் எந்தவிதமான சொந்தம் கொண்டாடும் அதிகாரம் ஏதுமின்றி ஆண்டனுபவித்துக்கொள்ள வேண்டியது.

நாம் நமக்கு கிடைத்த பாக சொத்தினை பெற்றுக்கொண்டு, அவரவர்களின் சுவாதீனத்தில் தக்க வைத்துக் கொண்டும், அவரவர்களின் பெயரில் சொத்துக்குரிய ரெவின்யூ ரிக்கார்ட்டுகளையும், பட்டாவையும் சப்-டிவிஷன் செய்துக்கொண்டும் அவரவர்கள் இஷ்டம் போல் அவர்களின் புத்திர பௌத்திர பாரம்பரியமாய், வித்தொத்தி தானாதி வினிமிய விக்கிரையங்களுக்கு உரித்த யோக்கியங்களுடன் சர்வ சுதந்திர பாத்தியதைகளுடன் சர்வ வில்லங்க சுத்தியாய் ஆண்டனுபவித்துக் கொள்ள வேண்டியது.

இனி நமக்குள் பிரித்துக்கொள்ள பொது சொத்துக்கள் ஏதும் கிடையாது. இனி நமக்குள் சூதக பாத்தியதைகள் தவிர, தனரொன பாத்தியதைகள் ஏதும் கிடையாது.

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள 'ஏ' ஷெடியூல் சொத்தின் ஒரிஜினல் தஸ்தாவேஜிக்களை நம்மில் ____ நபர் அவரது பொருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியது. இன்று

Verified RealEstate™

பதிவு செய்யப்படும் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் ஒரிஜினல் பத்திரம் நம்மில் ___வது நபர் அவர்கள் பொருப்பில் வைத்துக்கொள்ள வேண்டியது. அதற்கு இசைவு தரும் வகையில் நம்மில் ___வது நபர் மனப்பூர்வமான சம்மதம் தெரிவித்துக் கொள்கின்றார்கள். ஒரிஜினல் பத்திரத்தின் பிரதி காப்பியை நம்மில் ___வது நபர் வைத்துக்கொள்ள வேண்டியது.

அதேப்போல் நம்மில் ___வது நபர் அவர்களக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அடமானம் வைக்கம்போதோ கிரையம் செய்யும் போதோ அல்லது மற்ற ஆவணங்கள் ஏதேனம் பதிவு செய்யும் பொழுது இந்த பாகப்பிரிவினை ஒரிஜினல் பத்திர தஸ்தாவேஜிகளை, ____வது நபர் ___வது நபருக்கோ அவருடைய பிரதிநிதிகளுக்கோ, எந்தவிதமான தங்கு தடையுமின்றி காண்பிக்க வேண்டியது என்றும் இதன் மூலம் உறுதி கூறுகிறோம்.

## சொத்து விவரம்

ஆக இந்தப்படிக்கு நான் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமான சம்மதித்து எழுதிக் கொள்ளும் பாக ஆவணம் ஆகும்.

சாட்சிகள்

1.

2.

Verified RealEstate ™